

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான், தமது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் நகரத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழாவில் மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் முன்னிலையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கழக இளைஞரணி அறக்கட்டளை வளர்ச்சிக்கு ரூபாய் 10 லட்சத்திற்கான காசோலையை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ் குமார் வழங்கினார். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல்மாலிக், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செல்வ. துரைராஜ், தங்க. நாராயணசாமி, நெய்வேலி சதாம், முகமது பாசில் ஆகியோர் உள்ளனர்.

### சித்தையங்கோட்டை பெரிய பள்ளிவாசலில்

# அனைத்து மத நல்லிணக்க ‘இப்தார்’ நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பங்கேற்பு!

சின்னாளபட்டி, மார்ச்14-

சித்தையங்கோட்டை பெரிய பள்ளிவாசலில் அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ. பெரியசாமி கலந்து கொண்டார். ஆத்தூர் தொகுதியில் உள்ள இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு என்றும் கழகம் உறுதுணையாக இருக்கும் என அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சித்தையங்கோட்டை பெரிய பள்ளிவாசலில் அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முத்தவல்லி கே.எஸ்.உதுமான்அலி, எம்.சேக்தாவுது, கே.பி.செல்ல மரைக்காயர் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு பேசுகையில் அனைத்து சமுதாய மக்களும் இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் (இப்தார்) கலந்து கொண்டிருப்பது மத நல்லிக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. ஒவ்வொரு வருடமும் இந்த பள்ளிவாசலில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெருமையாக உள்ளது.

காரணம் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை ஆத்தூர் தொகுதியில் கழகத்திற்கும், எனக்கும் ஆதரவு அளித்து வரும் இஸ்லாமிய சமுதாய மக்களில் சித்தையங்கோட்டையில் வசிக்கும் இஸ்லாமிய சமுதாய மக்கள் காட்டும் அன்பு அளவில்லாதது. எந்தவொரு கோரிக்கையாக இருந்தாலும் அனைத்து சமுதாய மக்களும் பயன்பெறும் வகையில் கேட்பார்கள். உடனே நான் செய்து கொடுத்துள்ளேன். இப்பகுதி விவசாயி கள் நலன் கருதி சாலை வசதி, பாலம் வசதி, நீர்வரத்து வாய்க்கால் வசதி போன்ற அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சித்தையங்கோட்டை பெரிய பள்ளி வாசல் ஜமாத்தார்கள் சார்பாக அனைத்து மதங்களைச் சேர்ந்த குருமார்களுக்கு ஆடைகளுடன் நிதி உதவி வழங்கி வாழத்து தெரிவித்தார்.



சித்தையங்கோட்டை பெரிய பள்ளிவாசலில் அனைத்து மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ. பெரியசாமி கலந்து கொண்டார். ஆத்தூர் தொகுதியில் உள்ள இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், பள்ளிவாசல் ஜமாத்தார்கள் உட்பட பலர் உள்ளனர்.





கைத்தறி ஆடையை உடுத்துவோம்! நெசவாளர் வாழ்வை உயர்த்துவோம்!!



தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு
பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில்,
தலைவர் கலைஞர் அவர்கள்
கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றிட,
கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைத்து,
அந்த சங்கங்கள் மூலமாக அவர்கள் வாழ்வு மேம்படச் செய்த
டாக்டர் கலைஞர் அவர்கள் வழியில்,
இன்றைக்கு ஓய்வூதியம் பெறும் கைத்தறி நெசவாளர்களுக்கு
மாதம் 2000 ரூபாய் நிதி உதவி வழங்கிய தாய் உள்ளம் கொண்ட

மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும்,
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்
திரு. R.காந்தி அவர்களுக்கும்
எங்கள் நெஞ்சார்ந்த நன்றி! நன்றி! நன்றி!



இவண்
ஈரோடு மாவட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் சங்கம்